1994 ஜனவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புப் பயிர் அதிகம் உற்பத்தி செய்வதை முன்னிட்டு அந்தப் பகுதியிலே, ஆம்பூர் சர்க்கரை ஆலையை நிறுவி, அந்த சர்க்கரை ஆலையிலிருந்து நல்ல சத்துள்ள சர்க்கரையாக அங்கே வருகிறது என்பது தெளிவாகும். அதை விரிவு படுத்தி, ஏனைய அதாவது பாலாற்றுப் படுகை இல்லாமல் தூரங்களான, மேட்டுப்பகுதியான இடங்களுக்கும் விவசாயிகளை ஊக்குவித்து அவர்களுக்கு கிணறு லோன் மற்றும் மின் இணைப்பு விரைவாக தந்து கரும்பு பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பார்களா என துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆம்பூர் சர்க்கரை ஆலையினுடைய பிழி திறன் 1,400 டன்னாக இருக்கிறது. 2,200 டன் இருந்தால்தான் புல் யூட்டிலைசேசன் என்று சொல்லப்படுகிற முழு பிழி திறனை அங்கே நாம் எதிர்பார்க்க முடியும். அதற்கு கரும்பு பயிரிடும் நிலத்தினுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும். உறுப்பினர் தருமலிங்கம் அவர்களும், டாக்டர் பரந்தாமன் அவர்களும் ஒரு கூட்டணி ஏற்படுத்தி, அங்கே இருக்கிற விவசாயிகளை எல்லாம் அழைத்து அதற்கு உண்டான முயற்சியில் ஈடுபடுவார்களேயானால் அரசு நிச்சயமாக அவர்களுக்கு கை கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 169, திரு. எம்.பி.. சேகர். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

169–

உடல் ஊனமுற்ற ஏழை பெண்களுக்கு திருமணச் செலவுத் தொகை வழங்கும் திட்டம்.

* 21769–**டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

உடல் ஊனமுற்ற ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த 5 வது வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கு அவர்களின் திருமணச் செலவிற்காக ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர். எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8-வது வரை படித்த உடல் ஊனமுற்ற ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வரை வழங்குகிறார்கள். அதை மாற்றி 5-வது வரை படித்த ஏழை உடல் ஊனமுற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இந்தியாவிலே முதல் மாநிலமாக தமிழகத்தை ஆக்க வேண்டும் என்பதற்காக பாடுபட்டு வருகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவியின் ஆட்சியில் இந்த திருமண உதவித் திட்டங்களின் மூலமாகவாவது 8–வது வரை அந்த மாணவிகள், குழந்தைகள் படிப்பார்கள் என்றால் அது அரசுக்குக் கிடைக்கிற வெற்றி என்கிற காரணத்தினால் இதை 5–வது வகுப்புவரை என்று மாற்ற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல தற்போது இருக்கிற நிதி நெருக்கடியில் இந்தத் திருமண உதவித் தொகையை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்துகின்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் திருமண உதவித் தொகைக்கு பல பெண்களுக்கு நான் பரிந்துரை செய்தும் அந்தத் தொகைகள் இன்றும் வழங்கப்படாமல் இருக்கின்றன. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் அதனை வழங்குவதற்கு ஏதேனும் உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பெண்களுக்கு பரிந்துரை செய்தால் கிடைக்காது. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் பெண்களுக்குப் பரிந்துரை செய்தால் மட்டுமே கிடைக்கும். இதற்கு 500 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு திருமண உதவித் திட்டத்திற்கும் ஒவ்வொரு தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்தத் தொகையை அந்தந்த மாவட்டத்திற்குக் குறிப்பிட்டு நாங்கள் கொடுக்கிறோம். அந்த முழுத் தொகைக்கும் எவ்வளவு பேர்கள் அப்ளை செய்கிறார்களோ, அந்த அப்ளிகேஷன்களில் மிகவும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களை தேர்ந்தெடுத்து, அந்தப் பணம் முழுமையாக அந்த மாவட்டத்தில் செலவழிக்கப்படுகிறது.

1994 ஜனவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிற வகையிலே 8-ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு மட்டும்தான் உதவித் தொகை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். உடல் ஊனமுற்றவர்களைப் பொறுத்த வரையில் ஆரம்பப் பள்ளிகள் அந்தந்த ஊரிலேயே இருப்பதால், அங்கே படிக்கிறார்கள். அதற்குமேலே 8ஆம் வகுப்புவரை படிக்க வேண்டுமென்று சொன்னால் நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவர்கள் உடல் ஊனமுற்றவர்களாக இருக்கிற காரணத்தால் நீண்ட தூரம் சென்று, 8ஆம் வகுப்புவரை படிக்க வாய்ப்பு இல்லாததை உணர்ந்து, 5ஆம் வகுப்பு வரை படித்த உடல் ஊனமுற்றவர்களுக்கு 10,000 ரூபாய் இல்லாவிட்டாலும், 5,000 ரூபாயாவது கொடுப்பதற்கு மாண்புமிகு புரட்சி தலைவி அவர்களுடைய ஆட்சியிலே அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் சிறப்பாகப் படித்தால்தான் அவர்கள் சொந்தமாக ஏதாவது ஒரு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அரசு உதவி செய்ய முடியும் என்ற அடிப்படையில் அதைக் குறைக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் உடல் ஊனமுற்றவர்கள் படிப்பதற்கு எல்லாவிதமான சலுகைகளையும் அரசு அளிப்பதால், இது பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருஷமும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களில் எவ்வளவு பேர் பலனடைந்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இந்த திருமண உதவித் தொகை திருமண நாளே அரசு பரிசாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் செய்துகொண்ட பின்புதான் இந்தத் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு திருமண உதவித் திட்டமும் ஒவ்வொரு முறையிலே இருக்கிறது. ஏழை விதவையர் திருமண உதவித் திட்டம் என்றால் அது முன்னாலே கொடுக்கப்படுகிறது. 8ஆம் வகுப்புவரை படித்தவர்களுக்கு உதவி என்றால் திருமணம் ஆன பின்பு

கொடுக்கப்படுகிறது. அதைப்போல பார்வையற்றவர்களை திருமணம் செய்து கொள்பவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பணம் திருமணத்திற்கு முன்னால் கொடுக்கப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு திருமண உதவித் திட்டமும் அந்தந்த விதிப்படி தரப்படுகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் என்றால் அதில் ஆண்டு தோறும் 10,000 பேர்கள் பலனடைகிறார்கள். தமிழ்நாடு அரசு கலப்பு திருமண உதவித் திட்டத்திலே ஆண்டுதோறும் 554 பேர் பலனடைகிறார்கள். விதவைகள் மறுமண உதவித் திட்டம் என்றால் அதில் ஆண்டுதோறும் 262 பேர் பலனடைகிறார்கள். ஏழை விதவையரது மகள்களின் திருமண உதவித் திட்டம் என்றால் அதில் 1068 பேர் பலன் பெறுகிறார்கள். ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தில் 72 பேர் ஆண்டு தோறும் பலன் பெறுகிறார்கள். பார்வையற்றவர்களைத் திருமணம் செய்யும், குறைபாடுற்றவர் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 24 பேர் திருமண உதவித் தொகை பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 8ஆம் வகுப்புவரை படித்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் போது, கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேர், 15 ஆயிரம் பேர், வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் விண்ணப்பிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதனால் ஒரு குறிப்பிட்ட ஆண்டுவரை திருமணம் செய்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் என்று சென்ற ஆண்டு உத்தரவிடப்பட்டு, 1992ஆம் ஆண்டுக்கு முன்னால் பதிந்தவர்கள் யாவருக்கும் உதவித்தொகை கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. 1993ஆம் ஆண்டு திருமணம் செய்தவர்களுக்கு மட்டும்தான் உதவித் தொகை அளிக்கப்படும் என்ற சூழ்நிலை எங்கள் மாவட்டத்தில் ஏற்பட்டு, நாங்கள் பரிந்துரை பண்ணியும் அவர்கள் பலன் பெற முடியாமல், எந்தவித நிதி உதவியும் பெற முடியாமல் போய்விட்டது. அதையெல்லாம் அமைச்சரவர்கள் களைந்து, அவர்களுக்கும் உதவித் தொகை அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்தபோது திருமண உதவித் தொகை கோரி நிறைய பெட்டிஷன்கள், 20,000க்கும் மேலான பெட்டிஷன்கள் அப்படியே தேங்கிவிட்டன. அந்தப் பெட்டிஷன்களை எல்லாம் திரும்பப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது என்பது, நம்முடைய ஆட்சியிலே நிதி நெருக்கடியிலே இயலாத ஒன்றாகும். ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றவுடன்

1994 ஜனவரி 5]

அவ்வப்போது கொடுக்கிற மனுக்களை அவ்வப்போது பரிசீலித்து, உடனடியாக நிதி கொடுக்க முடியுமென்றால் அவர்களுக்கு நிதி அளிப்பதும், நிதி இல்லையென்றால் உடனடியாக மறுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், அரசை நம்பி கடன் வாங்கி கல்யாணம் செய்துவிட்டு, இந்தத் தொகைக்காக எதிர்பார்த்து இருக்கக் கூடாது என்பதற்காக உடனடியாகப் பணம் கிடைக்கவில்லை என்று இருந்தால் அதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும், தரக்கூடிய பணம், உடனடியாகத் தரப்படவேண்டுமென்றும் சொல்லியிருக்கின்ற காரணத்தால், அந்தந்த மாவட்டங்களிலிருந்து பெறப்படுகின்ற மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, 10,000 மனுக்கள் வந்தால் அதிலே மிகவும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மனுக்களைப் பரிசீலனை செய்து, கொடுக்கின்ற நிதி உதவியை உடனடியாக அரசு வழங்குகிறது, மறுக்கப்படுகின்ற மனுக்களைப் பற்றி, உடனடியாக அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 5000 பெறுவதற்காக ஏழைப் பெண்கள் இரண்டு மூன்று துறைகளில் அலைந்து பெற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த விதிமுறைகளைத் தளர்த்தி, சமுகநலத்துறையிலேயே அவர்கள் சென்று அதனை விசாரித்து அந்த உதவியை பெறும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா? அந்த விதியைத் தளர்த்த அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நேரடியாக சமுகநலத்துறையே இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில மனுக்கள் குறித்து அப்போதே மறுக்கப்படுவதாகக் கூறியுள்ளார்கள். அப்படி மறுக்கப்படுகிற மனுக்கள் அடுத்த ஆண்டு முடிவதற்குள் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அடுத்த ஆண்டுக்கு எடுத்துக் கொள்ளப்படமுடியாது. அப்போதே மறுத்துவிடுவதால் அடுத்த ஆண்டு வருகிற புதிய பெட்டிஷன்களைத்தான் ஏற்றுக் கொள்ளமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருமண உதவித் திட்டத்திற்காக மாவட்டத்திற்கு இவ்வளவு என்று ஒதுக்குகிறார்கள். இதிலே நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான பேர் மனுக்கள் செய்து, அப்படி உதவி கிடைக்காத நேரத்தில் எங்களிடத்திலேதான் வந்து நிற்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முடிவு செய்து, இதிலே முதன் முதலாக தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மிகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் என்று அப்படி வரிசைப்படுத்தி மனுக்களைப் பெற்று அதன் மூலம் கொடுப்பதற்கான வரைமுறையை ஏற்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமண உதவித் திட்டங்கள் ஒவ்வொரு பெயராலே இயங்கிக்கொண்டிருக்கின்றன இதில், பார்வையற்றவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது, உடல் ஊனமுற்றவர்களுக்கு என்றால் உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அதைப்போல தாழ்த்தப்பட்ட சமுதாயம், பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அப்ளை செய்திருந்தால் அவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. ஆகவே, 10ஆயிரம் மனுக்கள் வருகிறது என்றால், அவற்றில் எந்தெந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் மிக வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள், ஒரு தங்க தாலியைப் பெறுவதற்குக் கூட முடியாமல் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆலோசித்து, அந்தப் பெட்டிஷன்களுத்தான் முன்னுரிமை கொடுத்து இந்த அரசு ஏற்றுக் கொள்ளுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் அதிகமாக வாழக்கூடிய நமது தமிழகத்தில், புரட்சித்தலைவியுடைய இந்த நல்ல சீரிய தலைமையின் கீழ் இயங்கும் இந்த அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண்டுக்காண்டு

1994 ஜனவரி 5]

தேவையான அளவுக்கு எடுத்துவிட்டு, மீதி பெட்டிஷன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று கூறினார்கள். வரும் நிதி ஆண்டில் இது பற்றி சிந்தித்து அதிக குறியீடு வைத்து அப்படிப்பட்ட ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த, எட்டாம் வகுப்பு படித்த பெண்கள் அனைவருக்கும் வழங்குவதற்கு பட்ஜெட்டில் நிதியை அதிகமாக ஒதுக்கீடு செய்ய ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரம்ப பெட்டிஷன்கள் வருகின்ற காரணத்தால் அவ்வளவுக்கும் நிதி ஒதுக்கீடு செய்வது என்பது இயலாத காரியமாகும். இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் திரு. வேடியப்பன் அவர்களுடைய கோரிக்கை கவனத்தோடு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் நலவாழ்வில் அக்கறை கொண்டு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களின் புகழ்மிக்க ஆட்சியில், இளம் பெண்களின் திருமணத்திற்கு உதவி தருவதற்கென சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அரசு ஏறக்குறைய ஆறு திருமண உதவித் திட்டங்களை நடத்திக் கொண்டு இருப்பதால், இளம் பெண்களும் இந்தத் திருமண உதவித்திட்டத்தின் மூலமாகவே பயன்பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 170, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கடைசியாக எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் 171, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்தறை அமைச்சர்.

171--

ஆபாச சினிமா சுவரொட்டிகளையும் மற்றும் விளம்பரங்களையும் தடை செய்தல்.

***11566 டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—–